# கீழக்கரை நகராட்சி

## மன்ற சிறப்பு கூட்டம்

கீழக்கரை நகராட்சி மன்ற சிறப்பு கூட்டம் 24.01.2023 ஆம் தேதி செவ்வாய் கிழமை காலை 11.00 மணியளவில் **நகர்மன்ற தலைவர்** தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள்.

**பொருள் : 1**

சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.35945/2022EA2-SWM-16 நாள். 10.01.2023-ன்படி, கீழக்கரை நகராட்சிக்கு உட்பட்ட நகர் பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகளின் கீழ் குப்பைகள் உருவாகும் இடத்திலேயே மக்கும் குப்பைகள் மற்றும் மக்காத குப்பைகள் என தனித்தனியாக பிரித்து சேகரம் செய்து மறு சுழற்சி செய்யப்படும் இடத்திற்கு கொண்டு செல்வதற்கு செலவின தொகைகள் கீழ்காணுமாறு நிர்ணயம் செய்து ஒப்பந்தப்புள்ளி கோரி மூன்றாண்டுகளுக்கு ஒப்பந்த நிறுவனம் மூலம் பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ள உரிய வழிகாட்டுதல்களுடன் ஆணையிடப்பட்டுள்ளது. அதன் விவரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

(நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 35945/2022/SA2-SWM-16, நாள். 10.01.2023)

| Quantity of waster generated (TPD) | Rate per tonne (in Rs.) | Estimated base cost per day (Rs. in lakh) | Estimated base cost per year(Rs. in lakh) | Applicable GST 18% and LWF 1% (Rs. in lakh) | Estimated total cost per year (Rs. in lakh) |
|---|---|---|---|---|---|
| 20.38 | 3767.28 | 0.77 | 281.05 | 53.40 | 334.45 |

மேற்காணுமாறு நிர்ணயம் செய்யப்பட்ட செலவினங்களின்படி, இந்நகராட்சிக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.334.45 இலட்சம் செலவாகும் என்பதால் இச்செலவின தொகையினை பொதுநிதி மற்றும் 15th CFC Tied Grant நிதியில் இருந்து மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. மேலும், சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் ஆணையில் வழங்கப்பட்டுள்ள நிபந்தனைகளில் வரிசை எண்.07-ல் குறிப்பிட்டுள்ளபடி, ஒப்பந்த நிறுவனம் மூலம் தொடர்ந்து மூன்றாண்டுகளுக்கு பணிகளை மேற்கொள்ளவும், மூன்று ஆண்டுகளுக்கான செலவினம் ரூ.1003.35 இலட்சத்திற்கும் நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(கோப்பு எண். 329/2018/எச்1)

**(அலுவலகக்குறிப்பு**

சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர், அவர்களின் ஆணையின்படி, கீழக்கரை நகராட்சி பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை ஒப்பந்த நிறுவனம் மூலம் மேற்கொள்ள Tamilnadu Tender Transparancy Act 1998 and Rules 2000-ன்படி ஒப்பந்தப்புள்ளி கோரி தொடர் நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 231**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**பொருள் : 2**

கீழக்கரை நகராட்சி பொது சுகாதார பணிகளுக்கு பயன்படுத்தப்படும் கனரக வாகன ஓட்டுநர்கள் 2- எண்ணம் மற்றும் JCB இயக்குபவர் 1 - எண்ணம் தேவைப்படுவதால் பொதுசுகாதார பணிகளின் முக்கியத்துவம் கருதி இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அவர்களின் தினக்கூலி விலை விகித செயல்முறை ஆணை எண்.PDI. A3/614/2022, நாள். 25.06.2022-ன் அடிப்படையில் ஒப்பந்த நிறுவனம் மூலம் மேற்கண்டவாறு கனரக வாகன ஓட்டுநர்கள் மற்றும் JCB இயக்குபவரை கொண்டு பணிகள் செய்யவும், அதற்கான உத்தேச செலவினம் ஓராண்டிற்கு ரூ.9.75 இலட்சத்திற்கு நகர்மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
(கோப்பு எண். 82/2023/எச்1)

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 232**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**பொருள் : 3**

கீழக்கரை நகராட்சியில் சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களால் 11.12.2022 அன்று Local Water Supply Source மாலாங்குண்டு பகுதியை ஆய்வு மேற்கொண்ட போது, மேற்படி பகுதியில் அமைந்துள்ள 5 எண்ணம் திறந்தவெளி கிணறுகளை தூர்வாரி (Desilting) பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரும்படி உத்தரவிடப்பட்டுள்ளது. அதன்படி, மேற்படி பகுதியில் அமைந்துள்ள 5 திறந்தவெளி கிணறுகள் (Open well) தூர்வாரப்பட்டு மேல்மூடி இல்லாத கிணறு எண். 1 மற்றும் 3க்கு Angel அமைத்து weld mesk பணி மேற்கொள்வதற்கு ரூ2.20 லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்காணும் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்வதற்கு ஆகும் செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்வதற்கும் இந்நகர்மன்றத்தின் அனுமதிக்கு முன் வைக்கப்படுகிறது.
(கோப்பு எண். 50 /2023/இ1)

**அலுவலக குறிப்பு :**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) பொதுமக்களின் குடிநீர் அத்தியாவசியத்தை கருதி, இந்நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி இந்நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று மேற்காணும் பணிகள் மேற்கொண்டதையும், அதற்குண்டான செலவினம் ரூ. 2.20 லட்சம் மட்டும் இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண். 233**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**பொருள் : 4**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளில் அமைந்துள்ள தெருமின் விளக்குகளில் ஏற்படும் பழுதுகளை பழுது நீக்கம் செய்து நல்ல முறையில் எரிய வைப்பதற்கு தேவையான தெருமின் விளக்கு பராமரிப்பு உதிரி கையிருப்பு இல்லாததால் புதிதாக உதிரிபாகங்கள் வாங்கித் தருமாறு இந்நகராட்சி மின்பணியாளரால் கோரப்பட்டுள்ளது. ஆகவே, இந்நகர் பொதுமக்களின் அடிப்படை வசதியான தெருவிளக்குகளின் அத்தியாவசியத்தை கருத்தில் கொண்டு, மேற்படி உதிரிபாகங்கள் வாங்கிட ரூ. 2,05,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்காணும் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்வதற்கு ஆகும் செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்வதற்கும் இந்நகர்மன்றத்தின் அனுமதிக்கு முன் வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண்.49/2023/இ1)**

**அலுவலகக்குறிப்பு**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இந்நகர் பொதுமக்களின் அடிப்படை வசதியான தெருவிளக்குகளின் அத்தியாவசியத்தை கருத்தில் கொண்டு இந்நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி இந்நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று மேற்காணும் பணிகள் மேற்கொண்டதையும், அதற்குண்டான செலவினம் ரூ. 2,05,000/- மட்டும் இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண். 234**

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**ஆணையாளர்**
**கீழக்கரை நகராட்சி**